# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1963 - 2016 අප්‍රේල් මස 12 වැනි අඟහරුවාදා - 2016.04.12

*1963 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 504 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 507 |


***கவனிக்க.–*** *செத்சத யோகா நிகேதனய கார்யபாரய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, மே மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - திருகோணமலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண்கள் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, வைகாசி மாதம் 16 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, மாச்சு 29.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| திருகோணமலை | மொறவெவ | மொறவெவ வடக்குப் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கட்டுக்குளம் பத்து மேற்குப் பிரிவில் விவாகப் (பொது, கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், திருகோணமலை |

4-636

---

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு

### இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் ஆரம்ப தரத்தின் மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2015

ஆயுர்வேத திணைக்களத்தின் மருத்துவ உத்தியோகத்தர் வகுதியின் ஆரம்ப தரத்தைச் சேர்ந்த மருத்துவ உத்தியோகத்தர் பதவியில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் பொருட்டு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை 2015.05.01 ஆந் திகதியன்று பூர்த்திசெய்துள்ள தகுதி வாய்ந்தவர்களை தெரிவுசெய்வதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பின் பிரகாரம் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரிப்படிவத்துக்கு அமைவாக விண்ணப்பங்களைத் தயாரித்து பின்வரும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் “ஆயுர்வேத ஆணையாளர், ஆயுர்வேத திணைக்களம், பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம” என்னும் விலாசத்துக்குப் பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். இடதுபக்க மேல் மூலையில் “இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் ஆரம்ப தரத்தின் மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்” எனத் தெளிவாகக் குறிப்பிடல்

வேண்டும். அத்துடன் ஆட்சேர்ப்பின் பெயரை சிங்கள மொழி விண்ணப்பங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் மொழி விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2016.05.13 ஆகும்.

**குறிப்பு.**- விண்ணப்பம் அல்லது அது தொடர்பான ஆவணங்கள் தபாலில் காணாமல் போனது அல்லது தாமதமாகியது எனத் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவத்தை தாமதமாக்குவதன் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை விண்ணப்பதாரிகளே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1. **ஆட்சேர்ப்பு முறை.**- 2015.05.01 ஆந் திகதியன்று இந்த அறிவித்தலில் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ள இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பின் பின்னர் இற்றைவரை அரசாங்க சேவையில் நியமனம் பெறாத அடுத்து வரும் ஆண்டுகளுக்கான குழுக்களுக்குரிய மருத்துவப் பட்டதாரிகள், அவர்கள் இறுதிப் பட்டப் பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டுகளின் ஒழுங்கு முறையிலும் இறுதிப் பட்டப் பரீட்சையில் பெற்றுள்ள புள்ளிகளின் அடிப்படையிலுமான திறமையின் ஒழுங்கு முறையில் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

2. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்** :

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கும் கொள்கைத் தீர்மானத்துக்கு நீங்கள் கீழ்ப்படிதல் வேண்டும் ;

(ii) இந்தப் பதவியில் நியமனம் பெறுகின்ற உத்தியோகத்தர்கள் மூன்று ஆண்டுகள் (3) தகுதிகாண் காலத்துக்கு உட்படுதல் வேண்டும் என்பதுடன், ஆரம்ப தர பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஏற்ப பதவியுயர்வுகள் மேற்கொள்ளப்படும் ;

(iii) 2014.01.21 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 01/ 2014 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இந்த நியமனங்களைப் பொறுப்பேற்ற திகதி தொடக்கம் ஐந்து ஆண்டுகள் தாண்டுவதற்கு முன்னர், அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு நேரொத்ததாக அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றதாக உறுதிப்படுத்துதல் வேண்டும். அத்துடன் இந்த நியமனத்துக்காக தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை ஆங்கில மொழியிலாயின் தற்றுணிவின் பிரகாரம் அரச கரும மொழியாக சிங்களம் அல்லது தமிழ் என்றும் இரண்டு மொழிகளில் ஒரு மொழியில் தேர்ச்சி நியமனத் திகதியிலிருந்து 3 ஆண்டுகள் அதாவது தகுதிகாண் காலத்திலும் மற்றைய அரச கரும மொழித் தேர்ச்சி நியமனத் திகதியிலிருந்து 5 ஆண்டு காலத்துக்குள்ளும் பெற்றுக்கொள்ளல் வேண்டும் ;

(iv) முதல் நியமனத் திகதிக்கு அமைவாக கடமையைப் பொறுப்பேற்ற கடமை நிலையத்தில் மூன்று ஆண்டுகள் தகுதிகாண் காலத்தை நிறைவு செய்யும் வரைக்கும் இந்த நிலையத்தில் சேவையாற்ற வேண்டும் என்பதுடன் குறித்த காலப்பகுதிக்குள் இடமாற்றத்தை எதிர்பார்த்தல் ஆகாது.

(v) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைத் திட்ட விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், 1996 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதியிடப்பட்டதும் 924/ 2 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்கள ரீதியான ஏனைய கட்டளைகளுக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- இந்தப் பதவிக்கு ரூ. 52,955 - 3 x 1,335 - 7 x 1,345 - 2 x 1,630 - 16 x 2,170 - ரூ. 1,04,355 (SL-2-2016) மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும். (2016.02.25 ஆந் திகதியிடப்பட்ட 03/ 2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக இதன் II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பளம் வழங்கப்படும்.)

4. **வயதெல்லை.**- 2015.05.01 ஆந் திகதியன்று 45 வயதுக்கு மேல் இருத்தல் கூடாது.

5. **தகைமைகள்.**- ***கல்வி/ தொழில்சார் தகைமைகள்.***- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஆயுர்வேத/ சித்த/ யுனானி மருத்துவவியல் தொடர்பான ஐந்து வருட கற்கைநெறியுடன் ஒரு வருட சேவைக்கால பயிற்சியைப் பூர்த்திசெய்து பெற்றுக்கொண்ட பட்டப்படிப்பின் பின் ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவுசெய்யப்பட்ட மருத்துவர் ஒருவராக இருத்தல்.

5.1 ***உடல் ரீதியான தகைமைகள் :***

(i) சகல பரீட்சார்த்திகளும் இலங்கையில் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும்,

(ii) பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான அளவு உடல் மற்றும் உள ரீதியான தகுதியும் இருத்தல் வேண்டும்.

5.2 ***பிற தகைமைகள் :***

(i) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் ;

(iii) 2015.05.01 ஆந் திகதியன்று பதவியில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகளை எல்லாவிதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

6. **நேர்முகப் பரீட்சை.**- பொதுவான நேர்முகப் பரீட்சை.- அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கின்ற நேர்முகப் பரீட்சை சபையின் ஊடாக கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் பரீட்சிக்கப்படும்.

7. **பரீட்சார்த்திகளின் அடையாளங்கள்.**- நேர்முகப் பரீட்சைக்கு சகலவிதத்திலும் பூர்த்திசெய்து விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள பரீட்சார்த்திகள் மாத்திரம் அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகளும் முறையாக உறுதிப்படுத்திய பிரதிகளும் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது பின்வரும் ஆவணங்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ நேர்முகப் பரீட்சை சபை கோருமிடத்து சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பதாரி ஆயத்தமாக இருத்தல் வேண்டும் :-

(i) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;
(ii) பட்டப்படிப்புச் சான்றிதழ் ;
(iii) ஆயுர்வேத மருத்துவ சபையின் பதிவுச்சான்றிதழ் ;
(iv) பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் ;
(v) தேசிய ஆள் அடையாள அட்டை.

8. சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப் படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவம் 22 x 29 செ. மீ அளவில் A4 தாளில் தயாரிக்க வேண்டும் என்பதுடன், இலக்கம் 1 தொடக்கம் 9 வரையிலான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும், இலக்கம் 10 தொடக்கம் 11 வரையிலான தலைப்புக்கள் இரண்டாவது பக்கத்திலும் உள்ளாவறு தயாரிக்க வேண்டும் எனவும் இதற்கு உரியதான தகவல்கள் தமது கையெழுத்தினால் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்புடையதாகாத விண்ணப்பப்படிவங்கள் அறிவிக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றை கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

9. **போலியான தகவல்களை வழங்குதல்.**- தங்களால் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுகின்ற ஏதேனும் தகவல் பிழையானது அல்லது போலியானது என ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முன்னர் தெரியவருமிடத்து தங்களது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும்.

இவ்வாறான பிழையான அல்லது போலியான தகவல்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து இதற்குரிய நடவடிக்கைகளுக்கு உட்படுத்தி பணி நீக்கம் செய்யப்படுவர்.

10. வெற்றிடத்தை நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின்படி,

அனுர ஜயவிக்ரம,
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு.

சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு,
சங்கைக்குரிய பத்தேகம விமலவங்ச மாவத்தை,
கொழும்பு 10,

☐
(அலுவலக உபயோகத்துக்கு மாத்திரம்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் ஆரம்ப தரத்தின் மருத்துவ உத்தியோகத்தர் பதவி - 2015**

1. (i) (அ) முதலெழுத்துக்களுடன் இறுதியில் குறிப்பிடும் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(ஆ) முதலெழுத்துக்களுடன் இறுதியில் குறிப்பிடும் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

(ii) (அ) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(ஆ) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. (i) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----. (கடிதங்கள் இந்த முகவரிக்கு அனுப்பப்படும்)

(ii) தொலைபேசி இலக்கம் :----.

3. (i) பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(ii) 2015.05.01 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

4. ஆணா/ பெண்ணா ?

பெண் ☐ ஆண் ☐

(உரிய கூட்டுக்குள் x என இடுக.)

5. விவாகமானவரா/ விவாகமாகாதவரா ?

விவாகமானவர் ☐ விவாகமாகாதவர் ☐

(உரிய கூட்டுக்குள் x என இடுக.)

6. இலங்கைப் பிரசையா ? :----.

7. தேசிய இனம் :----.

8. நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட-

(i) மாகாண சபை :----.
(ii) மாவட்டம் :----.
(iii) பிரதேச செயலாளர் பிரிவு :----.

9. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

☐☐☐☐☐☐☐☐☐☐

10. கல்வித் தகைமைகள் :
பட்டப்படிப்பு தொடர்பான விபரங்கள் :

பி.ஏ.எம்.எஸ். (BAMS) ☐ பி.யூ.எம்.எஸ். (BUMS) ☐ பி.எஸ்.எம்.எஸ். (BSMS) ☐

(உரிய கூட்டுக்குள் x என இடுக.)

(1) பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.
(2) பட்டச் சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி :----.
(3) வகுப்பு :----.
(4) பட்டப்படிப்பை பூர்த்திசெய்த மொழி மூலம் :----.
(5) செயல்முறைப் பயிற்சி பெற்ற ஆண்டு :----.

*11.* ஆயுர்வேத மருத்துவ சபையின் பதிவு பற்றிய விபரங்கள் :

(1) இலக்கம் :----.
(2) ஆண்டு :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கியுள்ள விபரங்கள் உண்மையானதும் சரியானதும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். நான் ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் இதில் உள்ளடக்கப்பட்ட ஏதும் விபரங்கள் போலியானது அல்லது பிழையானது என நியமன அதிகார பீடத்துக்கு தெரியவருமிடத்து இதன் காரணத்தினால் நான் இந்தப் பதவிக்குத் தகுதியற்றவராவேன் எனவும், எந்தவொரு நட்டஈட்டுத் தொகையையும் செலுத்தாமல் என்னை பணி நீக்கம் செய்வதற்கு ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற .............................. (முழுப்பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும், ................................. ஆந் திகதி அவரின் கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் எனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பமும்,
உத்தியோகபூர்வ முத்திரையும்.

திகதி :----.

விண்ணப்பதாரி அரசாங்க சேவையில் உள்ளவராயின் திணைக்களத் தலைவரின் அறிக்கை :

மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் சரியானவை எனவும், அவரின் வேலை மற்றும் நடத்தை ............................... எனவும் உறுதிப்படுத்துகின்றேன். தற்பொழுது வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/ முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ முத்திரையும்.

திகதி :----.

*4-772*

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் புகையிரத பாதுகாவலர் பதவியின் பயிற்சித் தரத்திற்கும் மற்றும் புகையிரத பாதுகாவலர் III ஆந் தரத்திற்கும் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2016

இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத பாதுகாவலர் பதவியின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2016.05.16 ஆந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாததும் 30 வயதிற்குக் மேற்படாததுமான இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2016.05.16 ஆகும். சகல விண்ணப்பப்படிவங்களும் இத்தினத்திற்கு முன்பு "பரீட்சை ஆணையாளர் நாயகம், மதிப்பீடு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த. பெ. இலக்கம் 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். எந்த விண்ணப்பப்படிவமும் தனிப்பட்ட பெயருக்கோ அல்லது கையில் கொண்டுவந்து பாரமளித்தலோ செய்யக்கூடாது. பூரணமற்ற மற்றும் முறையற்ற, தேவையான தராதரங்களைக் கொண்டிராத, உரிய முறையில் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத, தாமதமாகிக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் எவ் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அரச சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை குறிப்பிட்ட தினத்திற்கு முன்பு தமது திணைக்களப் பிரதானியினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும். இப்பரீட்சையை நடாத்துவதற்காக பரீட்சை நிலையம் அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் நகரங்களும் அதன் இலக்கங்களும் 1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் இந்நகரத்தையும் அதன் இலக்கத்தையும் தேர்ந்தெடுத்து பூரணப்படுத்தப்படல் வேண்டும். இத்தேர்ந்தெடுப்பை பின்பு மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது. இருந்தும் போதுமானளவு விண்ணப்பதாரிகள் தொகையை கொண்டிராத நகரங்களின் விண்ணப்பதாரிகள் கிட்டிய ஏனைய பரீட்சை நிலையத்திற்கு அனுப்பப்படுவர். மேலும் எதிர்பார்க்கப்படும் நகரங்கள் சகலதிலும் அல்லது கூடிய அளவில் அல்லது பரீட்சை நிலையம் அமைப்பதற்கு போதுமானளவு விண்ணப்பதாரிகள் தொகையினர் விண்ணப்பிக்காதவிடத்து பரீட்சையைக் கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 1 ஆம் அட்டவணை

*பரீட்சை நிலையம் அமையப்பெறும் நகரங்களும் அதன் இலக்கங்களும்*

| *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலநறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொனராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

1. **விண்ணப்பம் கோரப்படும் பதவி.**- புகையிரத பாதுகாவலர் பயிற்சித் தரம்/ புகையிரத பாதுகாவலர் III ஆம் தரம் (ஒரு நபருக்கு ஒரு தரத்திற்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.).

2. **பதவியின், கடமையின் தன்மை.**- இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத பாதுகாவலர் தரத்தின் கடமைகளை மேற்கொள்ளல், சகல புகையிரத பாதுகாப்பு நியதிகளையும், ப்ளொக் கோட்பாடு மற்றும் புகையிரத உபதேச கோவை நியதிகளையும் கடைப்பிடித்து புகையிரத பயணிகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் புகையிரத போக்குவரத்தின்போது ஒப்படைக்கப்படும் கடமை பட்டியலின்படி கடமையை மேற்கொள்ளல்.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- பயிற்சிக் காலத்தில் மாதாந்தம் ரூபா 15,000 ஆன கொடுப்பனவு வழங்கப்படும்.

புகையிரத பாதுகாவலர் III ஆம் தரத்துக்கான சம்பள அளவுத் திட்டம்.- ரூபா 16,500-5 x 240-5 x 280 - 10 x 350 - 10 x 360.

4. **பயிற்சித் தரத்திற்குச் சேர்த்துக்கொள்வதற்கான தகைமை.**-

(அ) ***கல்வித் தகைமைகள் :***

(i) மொழி அல்லது இலக்கியம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

உடன்

(ii) க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் இணைந்த கணிதம், பௌதிகவியல் விஞ்ஞானம் மற்றும் இன்னும் ஒரு விஞ்ஞான பாடம் உட்பட சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் (பழைய பாடத் திட்டத்தின்படி கணிதப் பிரிவில் மூன்று (3) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்).

**புகையிரத பாதுகாவலர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமை.**-

(ஆ) ***கல்வித் தகைமைகள் :***

(iii) மொழி அல்லது இலக்கியம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

உடன்

(iv) க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் இணைந்த கணிதம், பௌதிகவியல் விஞ்ஞானம் மற்றும் இன்னும் ஒரு விஞ்ஞான பாடம் உட்பட சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் (பழைய பாடத் திட்டத்தின்படி கணிதப் பிரிவில் மூன்று (3) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்).

(இ) ***தொழிற் தகைமைகள்.***-

மேலுள்ள (ஆ) (III) உடன் (IV) இல் குறிப்பிடப்பட்ட அடிப்படைக் கல்வித் தராதரத்துடன் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள தொழில் தராதரங்களில் ஏதேனும் ஒன்றில் விண்ணப்பதாரி பெற்றிருத்தல் வேண்டும் :

(i) மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் பொறியியலாளர் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் பொறியியலாளர் விஞ்ஞான தேசிய டிப்ளோமா ;

அல்லது

(iii) கல்வி, உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய பொறியியலாளர் டிப்ளோமா ;

அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(v) இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியலாளர் பரீட்சையில் 1 ஆம் பகுதியை திருப்தி கரமான முறையில் பூரணப்படுத்தியிருத்தல் ;

அல்லது

(vi) தொழில் தன்மைக்கேற்ற தேசிய தொழில் தராதரத்தை (NVQ) 6 அளவு மட்டத்திலான தராதரத்தைப் பூரணப் படுத்தி இருத்தல் ;

அல்லது

(vii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களிடம் விசாரித்து கருத்தறியப்பட்டதன் பின்பு மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப தராதரங்களுக்கு சகல வழிகளிலும் சமமானதாக மூன்றாம்நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தொழில்நுட்ப தராதரத்தைப் பெற்றிருத்தல்.

(ஈ) ***உடற்தகுதி :***

(i) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை புரிவதற்கான சகல உடற்தகுதிகளையும் பெற்றிருத்தல் வேண்டும் ;

(ii) பதவியின் கடமைகளை மேற்கொள்ளக் கூடியளவுக்கு போதுமான அளவு உடற்தகுதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(iii) உயரம் 5 அடி 4 அங்குலத்திற்கு குறையாமலும், நெஞ்சளவு 32 அங்குலத்திற்கு குறையாமலும் இருத்தல் வேண்டும் ;

(iv) 6/6, 6/6 அளவிலான கண் பார்வையளவு பரிசோதனை யில் சித்தியடைதல் வேண்டும்.

(உ) ***வேறு தகைமைகள் :***

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரி சிறந்த குணநலமுடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

***குறிப்பு.***- இவ் அறிவித்தல் வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதியன்று மேற்குறிப்பிட்ட சகல தராதரங்களையும் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை.**- மேலுள்ள (4) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தராதரங்களைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு திறந்த எழுத்துமூல போட்டிப் பரீட்சையை நடாத்தி விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமையின் ஒழுங்கு வரிசையின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். விண்ணப்பம் கோரப்படும் சந்தர்ப்பத்தில் நிலவும் வெற்றிடங்கள் மாத்திரம் நிரப்பப்படுவதுடன் காத்திருப்போர் இடாப்பில் வைத்து ஆட்சேர்ப்புச் செய்தல் மேற்கொள்ளப்பட மாட்டாது.

6. **ஆட்சேர்ப்பு செய்யும் பரீட்சையின் பரீட்சை உள்ளடக்கம் :**

(i) இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

(ii) பரீட்சை முறை :

(அ) பரீட்சை சிங்களம், தமிழ் மொழிகளில் நடாத்தப் படும் ;

(ஆ) சகல கேள்வித்தாள்களுக்கும் தோற்ற முடிவது மேற்குறிப்பிட்ட (4) இன்கீழ் தகுதிபெற்றுள்ள மொழிமூலம் மாத்திரமாகும். தேர்ந்தெடுத்த மொழி மூலத்தை பின்பு மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(iii) பரீட்சை விடயங்கள் :

(அ) பொது அறிவும் நுண்ணறிவும்
(ஆ) தொழில்நுட்ப அறிவு

(iv) விடய உள்ளடக்கம் :

(அ) பொது அறிவும் நுண்ணறிவும்
(காலம் : 1 மணித்தியாலம்)
- புள்ளி 100 ஆகும்.

விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான ஆற்றலையும் விவரிக்கும் ஆற்றலையும் சரியான தீர்மானம் எடுக்கும் ஆற்றலையும் பொது அறிவையும் புத்திக்கூர்மையையும் அளவிடும் வகையில் இக்கேள்வித்தாள் அமையப்பெற்றிருக்கும். இது கணித குளறுபாடுகள், பொது அறிவு, சுற்றாடல் சம்பந்தப்பட்ட கேள்விகளைக் கொண்ட கோடிடும் அல்லது சுருக்க விடை எதிர்பார்க்கப்படும் கேள்வித்தாளாகும்.

(ஆ) தொழில்நுட்ப அறிவு (காலம் : 3 மணித்தியாலம்)
- முழுப்புள்ளி 100 ஆகும்.

க. பொ. த. (உயர் தரம்) மட்டத்திலான இணைந்த கணிதம், பௌதிகவியல் விஞ்ஞானம் போன்ற விடயங்கள் சம்பந்தமாக அறிவையும் அடிப்படை தொழில்நுட்பம், பொதுவான இயந்திர உபகரணங்கள் பற்றிய அறிவைப் பரீட்சிக்கும் வகையில் அமைந்த கேள்வித்தாளாகும். சகல கேள்விகளுக்கும் விடையளித்தல் வேண்டும்.

***தேர்ந்தெடுக்கும் முறை.***- ஒவ்வொரு விடயத்திலும் தகுதி பெறுவதற்காக 50 புள்ளிகள் வீதம் அல்லது அதற்கு மேல் பெற்ற விண்ணப்பதாரிகள் பரீட்சையில் சித்தி அடைந்ததாகக் கருதப்படுவார்கள். இப்பரீட்சையின் இரு பாடங்களிலும் கூடிய புள்ளிகளைப் பெற்று சித்திபெறும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து தராதரங்கள் பரிசீலனை செய்யப்படும். விண்ணப்பம் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலவிய வெற்றிடங்களுக்கு ஏற்ப புகையிரத பாதுகாவலர் பயிற்சித் தரம்/ III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர். நியமிப்பு செய்வதற்காக விண்ணப்பதாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவது மேலுள்ள 6 இல் IV இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கு உட்பட்டு பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள திறமையின் வரிசையின் அடிப்படையிலாகும்.

7. **விண்ணப்பப்பத்திரம் தயாரிப்பதற்கும் பூரணப்படுத்துவ தற்குமான அறிவுறுத்தல்.**- (i) விண்ணப்பப்படிவத்தை ஏ-4 (தட்டச்சு கடதாசி) அளவுள்ள கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும். (விண்ணப்பப்படிவத்தை தமது கையெழுத்தின் மூலம் பூரணப்படுத்தல் வேண்டும்.)

விண்ணப்பப்படிவத்தில்-

1 ஆம் பக்கத்தில் 1 இலிருந்து 8 வரையிலான விடயங்களும்
2 ஆம் பக்கத்தில் 9 இலிருந்து 11 வரையிலான விடயங்களும்
3 ஆம் பக்கத்தில் கையொப்பத்தை உறுதிப்படுத்தலும் திணைக்கள/ நிறுவன பிரதானியின் உறுதிப்படுத்துகையும்
உள்ளடக்கப்படல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும், பூரணமற்ற வகையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் எவ் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி ஒன்றை வைத்துக்கொள்ளல் உமக்கு பிரயோசனப்படக்கூடியதாகவிருக்கும். மேலும் பூரணப்படுத்தும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதா என்று விண்ணப்பதாரி உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களிகள் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் அவசியமாகும்.

(ii) குறிப்பிட்ட பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் 500 ரூபா ஆகும். அதை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவிடும் வகையில் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி அல்லது அதற்கு முன்பு நாட்டின் எப்பாகத்திலேனும் அமைந்துள்ள உமக்கு வசதியான தபால் அலுவலகத்தில்/ உப தபால் அலுவலகத்தில் செலுத்த முடியும். அவ்வாறு பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு விண்ணப்பப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை இணைத்தல் அல்லது வேறு வழிகளில் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துதல் விண்ணப்பப்படிவத்தை நிராகரிப்பதற்கு காரணமாக அமையும். இப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்மிடம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமுடையதாக இருக்கும்.

(iii) விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் புகையிரத பாதுகாவலர் பயிற்சித் தரம் மற்றும் புகையிரத பாதுகாவலர் III ஆம் தரத்திற்கு சேர்த்துக்கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை - 2016" எனவும் குறிப்பிடவும்.

(iv) வெளி விண்ணப்பதாரிகளின் கையொப்பத்தை உறுதிப் படுத்தல் "அரச பாடசாலையின் அதிபர், பகுதி கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், 2,40,360 ரூபாவான மாதாந்த ஆரம்ப சம்பளத்தை அல்லது அதற்குக்கூடிய ஆரம்ப சம்பளத்தைப் பெறும் அரச அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவிநிலை தரத்தையுடைய உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது தலைமை பிக்கு அல்லது ஏனைய மத ஸ்தலங்களுக்குப் பொறுப்புடைய மதகுருமார்களினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(v) தற்போது அரச சேவையில் உள்ள உத்தியோத்தர்களின் கையொப்பம் தமக்கு கிட்டிய சேவைப் பிரதானியினால் உறுதிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இவர்களின் விண்ணப்பப்படிவம் திணைக்கள பிரதானியினூடாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

(vi) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்று கருத்திற்கொண்டு குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ள குறிப்பிட்ட தினம் அல்லது அத்தினத்திற்கு முன்பு விண்ணப்பப்படிவம் அனுப்பியுள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்படல் வேண்டும். இப்பதவிக்கு விண்ணப்பதாரி தகுதிபெற்றுள்ளார் எனக் கருதப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலின்படி தகைமைகளைக் கொண்டுள்ளாராவென பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தராதரங்கள் இல்லை எனத் தெரியவருமிடத்து அவ்விண்ணப்பதாரியின் பரீட்சார்த்த தகைமை இரத்துச் செய்யப்படும்.

(vii) விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பப் பட்டவுடன் அதுபற்றி குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் விடுக்கப்பட்டு இரண்டு மூன்று நாட்களுக்குப் பின்னர் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிட்டால் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அதுபற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு தெரிவித்தல் வேண்டும். நீர் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதியையும் பதிவுத்தபால் மூலம் அனுப்பிய பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளியான பிரதேசமாக இருப்பின் அனுமதி அட்டை அனுப்புவதற்கான பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்ட உமது வேண்டுகோள் கடிதத்தை இலங்கை பரீட்சை திணைக்களத்திற்கு அறிவித்து விசாரித்தல் மிகவும் பயனுடையதாகவிருக்கும்.

(viii) விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு முன்பு தமது பரீட்சை அனுமதி அட்டையின் கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளன்று பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய பரீட்சை அனுமதி அட்டையை முன்வைத்தல் வேண்டும். அவ்வாறில்லாதவிடத்து பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது.

(ix) விண்ணப்பதாரியின் ஆள் அடையாளத்தை பரீட்சை மேற்பார்வையாளரிடம் உறுதிப்படுத்துவதற்காகவேண்டி ஏற்றுக்கொள்ளப்படுவது ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள ஆள் அடையாள அட்டை அல்லது அனுமதிக்கப்பட்ட கடவுச்சீட்டு மாத்திரமாகும்.

(x) விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படல் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளைப் பெற்றுள்ளார் எனக் கருதப்பட மாட்டாது.

(xi) பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் உட்பட்டவர்களாவர். அச்சட்டதிட்டங்களை மீறுகின்றபோது பரீட்சை ஆணையாளரினால் விடுக்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும்.

(xii) வர்த்தமானி அறிவித்தலில் 6-V பந்தியின்படி எழுத்துமூல போட்டிப் பரீட்சையில் தகைமைகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளின் முழுப்புள்ளிகளின் திறமையின் வரிசைப்படி தயாரிக்கப்பட்ட பெறுபேறுகள் அறிக்கை புகையிரத பொது முகாமையாளருக்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் அறிவிக்கப்படும். அல்லது www. results.exams.lk இணையத் தளத்தினூடாக வெளியிடப்படும்.

**8. சேவை நிபந்தனை.-** பயிற்சித் தரத்திற்கு சேர்த்துக்கொள்ளப்படுவர்களுக்கு இரண்டு வருட (2) பயிற்சிக்காலம் உள்ளதுடன் அக்காலவெல்லைக்குள் மாதாந்தம் 15,000 ரூபாவான கொடுப்பனவு வழங்கப்படும். பயிற்சியைத் திருப்திகரமான முறையில் நிறைவு செய்ததன் பின்பு III ஆம் தரத்திற்கு சேர்த்துக்கொள்ளப்படுவதுடன் குறிப்பிட்ட சம்பள அளவுத்திட்டத்தில் ஆரம்ப அளவில் வைத்து சம்பளம் வழங்கப்படும். புகையிரத பாதுகாவலர் III ஆம் தரத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் பயிலுநர் காலத்திற்கு உட்பட்டு பாதுகாவலர் கடமைகளுக்குரிய தொழில் மற்றும் நியதிகள் சம்பந்தமான பயிற்சிகள் வழங்கப்படும்.

**9. சேவையில் ஈடுபடுத்தும் நிபந்தனை.-** (i) இப்பதவி நிரந்தர மானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். தற்போது விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளவர்கள் மேலும் அதற்காக அங்கத்துவப் பணம் செலுத்துதல் வேண்டும்.

(ii) அரசாங்க பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 07/2007 இன் விதிமுறைகளுக்கேற்ப அரச சேவைக்குச் சேர்ந்த மொழி மூலத்திற்கு மேலதிகமாக மற்றைய அரச மொழி சம்பந்தமான தேர்ச்சியை ஐந்து வருட காலத்திற்குள் பெறுதல் வேண்டும். அத்தேர்ச்சியை பெறாத உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றம் தேர்ச்சியடையும் வரை நிறுத்திவைக்கப்படும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் தாபன விதிக்கோவையினதும், நிதிப்பிரமாணத்தினதும் ஏற்பாடுகளுக்கும் அரசாங்க பொது நிருவாக சுற்றுநிருபத்திற்கும் அடிக்கடி அரசாங்கத்தினால் விடுக்கப்படும் கட்டளைகளுக்கும் திணைக்கள உபதேசங்களுக்கும் கீழ்ப்பட்டு செயற்படல் வேண்டும்.

பி. ஏ. பீ. ஆரியரத்ன,
புகையிரத பொது முகாமையாளர்.

புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத பாதுகாவலர் பதவியின் பயிற்சித் தரத்திற்கு மற்றும் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை-2016**

Open Competitive Examination for Recruitment to the Post of Guard Trainee Grade and Guard Grade - III of Sri Lanka Railway Department - 2016

(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழி மூலம் :
சிங்களம் - 2 ☐
தமிழ் - 3 ☐
(குறித்த இலக்கத்தை கூட்டிற்குள் எழுதவும்)

விண்ணப்பிப்பது :
பயிற்சித் தரம் - 1 ☐
III ஆம் தரம் - 2
(குறித்த இலக்கத்தை கூட்டிற்குள் எழுதவும்)

பிரசாவுரிமை :
பரம்பரை மூலம் - 1 ☐
பதிவு மூலம் - 2
(குறித்த இலக்கத்தை கூட்டிற்குள் எழுதவும்)

| பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கும் நகரம் : | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1 ஆவது விருப்பம் | | |
| 2 ஆவது விருப்பம் | | |

பரீட்சை அறிவித்தலின் முதலாம் பந்தியை பார்க்கவும். விண்ணப்பிக்கும் நகரத்தை பின்பு மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது.

1. முழுப்பெயர் :—
   (i) ஆங்கில பெரிய எழுத்துக்களில் :————.
   (உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
   (ii) சிங்களத்தில்/ தமிழில் :————.

2. முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயர் :—
   (i) ஆங்கிலத்தில் :————.
   (உதா : GUNAWARDHANA, H. M. S. K.)
   (ii) சிங்களத்தில்/ தமிழில் :————.

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

4. நிரந்தர முகவரி :—
   (i) சிங்களத்தில்/ தமிழில் :————.
   (ii) ஆங்கிலத்தில் :————.

5. பால் : ஆண்/ பெண் :—
   பெண் - 1 ☐
   ஆண் - 0
   (பொருத்தமான இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

6. இனத் தொகுதி :
   சிங்களவர்-1, இலங்கைத் தமிழர்-2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்-4, பறங்கியர்-5, மலேயர்-6 ☐
   (பொருத்தமான இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

7. வதிவிடம் :
   (i) கிராம அலுவலர் பிரிவு :————. அதன் இலக்கம் : ☐
   (ii) பிரதேச செயலாளர் பிரிவு :————.
   (iii) மாவட்டம் :————.

8. (i) பிறந்த திகதி :—
   ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐
   (ii) 2016.05.16 ஆந் திகதியன்று வயது :—
   வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

9. (அ) கல்வித் தகைமை :
(i) க. பொ. த. (சா. தரம்) :
சுட்டெண் :————— வருடம் :—————.

| தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| (1) | | |
| (2) | | |
| (3) | | |
| (4) | | |

| தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| (5) | | |
| (6) | | |
| (7) | | |
| (8) | | |

(ii) க. பொ. த. (உயர் தரம்) :
சுட்டெண் :—————, வருடம் :—————.

| தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| (1) | | |
| (2) | | |
| (3) | | |
| (4) | | |

(ஆ) தொழில் தகைமை :
.....................................................................................................................................................
.....................................................................................................................................................
.....................................................................................................................................................

10. நீர் எப்போதாவது ஏதேனும் குற்றத்தின் நிமித்தம் நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாக கருதப்பட்டுள்ளீரா ?

ஆம் ☐ இல்லை ☐

(ஏற்புடைய கூட்டில் ✓ அடையாளம் இடுக)

11. விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்துகை :

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் நான் அறிந்த வகையில் உண்மையானதெனவும் சரியானதெனவும் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் ஏதேனும் பகுதிகள் பூரணப்படுத்தப்படாததால் அல்லது பிழையான முறையில் அல்லது பொய்யான முறையில் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும் நான் நன்கறிவேன். அதன் மூலம் ஏற்படும் நஷ்டத்தையும் நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்வேன்.

(ஆ) மேலுள்ள (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதென பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்பு தெரியவருமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். அதன் மூலம் ஏற்படும் நஷ்டத்தையும் நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்வேன்.

(இ) 2016, ............................ ஆந் திகதி பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு 500 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட இலக்கம் .......................... ஆம் இலக்கம் உடைய பற்றுச்சீட்டை இத்துடன் இணைத்துள்ளேன்.

| பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு அதன் ஓரத்தில் ஒட்டவும்)<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியைத் தம்மிடம் வைத்துக்கொள்ளவும்) |
|---|

—————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :—————.

12. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு. ................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் ..................... ஆந் திகதி மேலுள்ள கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் என உறுதிப்படுத்துகிறேன்.

—————,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :—————.
பதவி :—————.
முகவரி :—————.
திகதி :—————.
(தயவுசெய்து உத்தியோக இறப்பர் இலட்சினையைப் பொறிக்கவும்.)

13. **திணைக்கள/ நிறுவன தலைவரின் சான்றிதழ் :**

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு. ................................... அவர்கள் .............................. திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ................................ ஆக சேவை புரிகிறார். அவருக்கு எதிராக முற்றுப்பெறாத ஒழுக்காற்று நடவடிக்கை உள்ளது/ இல்லை. அவரின் சேவை நடத்தை, கடமைக்கு சமுகம் தரல் திருப்திகரமானது/ அதிருப்திகரமானது. குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அதன் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளது. அவர் புகையிரத திணைக்களத்தின் புகையிரத பாதுகாவலர் பயிற்சித் தரம்/ III ஆம் தரத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுமிடத்து இத்திணைக்களத்திலிருந்து/ நிறுவனத்திலிருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/ முடியாதென தெரிவித்துக்கொள்கிறேன். (பொருத்தமற்ற சொற்களை நீக்கிவிடவும்.)

————,
திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :————.
பதவி :————.
முகவரி :————.
திகதி :————.
(தயவுசெய்து இறப்பர் இலட்சினையைப் பொறிக்கவும்.)

4-547

---

## அரசாங்க சேவை ஆணைக்குழு

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

### பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் நிறைவேற்றுத் தர சேவை வகுதியைச் சேர்ந்த உதவிப் பணிப்பாளர் (திணைக்களத்திடப்பட்ட) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை -2016

இவ் அமைச்சின் நிறைவேற்றுத் தர சேவை வகுதியைச் சேர்ந்த IIIஆம் வகுப்பில் உதவிப் பணிப்பாளர் (திணைக்களத்திடப்பட்ட) பதவியில் நிலவுகின்ற 02 வெற்றிடங்களை நிரப்புவதற்காக பின்வரும் தகைமைகள் கொண்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனையின்படி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் அறிவித்தலின் முடிவில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்பதாக "செயலாளர், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, 11 ஆம் மாடி, செத்சிரிபாய II ஆம் கட்டம், பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். உறையின் இடது மேல் மூலையில் "பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் நிறைவேற்றுத் தர சேவை வகுதியைச் சேர்ந்த உதவிப் பணிப்பாளர் (திணைக்களத்திடப்பட்ட) பதவிக்கு ஆட்சேர்ப்புக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை-2016" என தெளிவாக குறிப்பிட வேண்டும். மேலும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழியிற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிட வேண்டும்.

(அ) விண்ணப்பங்களைக் கோரப்படுகின்ற கடைசித் திகதி 2016.05.13 ஆகும்.

**குறிப்பு.-** விண்ணப்பப்படிவமொன்று அல்லது அது தொடர்பான ஏனைய கடிதமொன்று தபாலில் காணாமற்போதல் அல்லது தாமதமாதல் என மேற்கொள்ளப்படுகின்ற முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. முடிவுத் திகதி வரை விண்ணப்பங்களை தாமதித்தல் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கு விண்ணப்பதாரரே பொறுப்பேற்றல் வேண்டும்.

1. **சேவைக்கு ஆட்சேர்ப்பும் முறை.-** அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்து மூலமான பரீட்சைக்கு உட்படுத்திய பின்னர், எழுத்து மூலமான பரீட்சையின் உயர்ந்த திறன்களை காட்டிய விண்ணப்பதாரர்களின் சான்றிதழ் பரிசோதனை செய்த பின்னர் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தகைமையுள்ள விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவர்.

2. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

(1) இப்பதவி நிரந்தரமானது மற்றும் ஓய்வூதியம் உடையது.

(2) பதவிக்கு ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்களை ஒரு வருடத்திற்காக வேலை பார்க்கும் காலத்திற்கு உட்படும் ஆவதோடு, பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டு மூன்று (03) வருட காலத்தினுள் முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(3) பொது நிருவாக சுற்றறிக்கை 01/ 2014 இற்கமைய அரச கரும மொழித் தேர்ச்சியை உரிய முறையில் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

(4) அரச சேவை ஆணைக்குழுவின் தொழிற்பாட்டுத் திட்டத்தின் விதிகளுக்கும், சேவை பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் தாபன விதிக் கோவையின் கட்டளைகள், நிதிப்பிரமாணங்கள், அரசினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் நிறைவேற்றுத் தர சேவை வகுதியைச் சேர்ந்த உதவிப் பணிப்பாளர் (திணைக்களத்திடப்பட்ட) பதவிக்கான ஆட்சேர்ப்பும் ஒழுங்குவிதி மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களின் நிபந்தனைகள் இப்பதவிக்காக உரியதாகும்.

3. **சம்பள அளவுத்திட்டம்.-** இப்பதவிக்காக 6/ 2006 இலக்க முடைய பொது நிருவாக சம்பள சுற்றறிக்கைக்கமைவாக SL-1-2006, 22,935 ரூபா - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - 53,555 (மாதாந்த) சம்பள அளவுத்திட்டமொன்று உரியதாகும்.

4. **கல்வித் தகைமைகள்.-** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிறுவனமொன்றின் அல்லது வழங்கப்படும் விவசாயம், பெருந்தோட்ட முகாமைத்துவம், அறிவியல் முகாமைத்துவம் என்ற பாடங்களுக்குரிய பட்டமொன்று வகுப்புச் சித்தியுடன் பெற்றிருத்தல்.

5. **அனுபவம்**.- பதவிகளில் நிரந்தரமாகவும், சார்ந்த சேவை வகுதியில் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் 5 வருட காலத்திற்கு குறையாத உயிர்ப்புள்ள மற்றும் மகிழ்ச்சிகரமான சேவைக்காலமொன்று பூர்த்திசெய்யப்பட்டுள்ள பெருந்தோட்டத் துறை தொடர்பான அறிவுள்ள உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

6. **வயதெல்லை**.- தேவையில்லை.

7. **உடற்தகைமைகள்** :

(1) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்த ஒரு பிரதேசத்திலும் சேவையாற்றவும்,

(2) பதவியின் கடமைகளை நிறைவேற்றவும் போதிய உடல் மற்றும் உளப் பொருத்தமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

8. **ஏனைய தகைமைகள்** :

(1) பதவி நிரந்தரமானதாக இருத்தல் வேண்டும்.

(2) முந்தைய 05 வருட மகிழ்ச்சிகரமான சேவைக்காலம் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

(3) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக தேவையான அனைத்து தகைமைகளை, விண்ணப்பங்கள் கோரப்படும் வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்படும் முடிவுத் திகதிக்கு எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

9. 9.1 ***எழுத்துப் பரீட்சை*** :

*9.1.1 இப்பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.*

| *பாட இலக்கம்* | *பாடம்* | *காலம்* | *ஆகக் கூடிய புள்ளிகள் அளவு* | *சித்திக் கான புள்ளிகள் அளவு* |
|---|---|---|---|---|
| 01 | இலங்கை பெருந் தோட்டத் துறையில் தேசிய முக்கியத் துவம் | 03 மணி | 100 | 50 அல்லது அதற்கு கூடியதாக |
| 02 | தோட்டக் கம்பனிகள் முகாமைத் துவம் | 03 மணி | 100 | 50 அல்லது அதற்கு கூடியதாக |

*9:1:2 பாடத்திட்டம்* :

| | | | |
|---|---|---|---|
| 1 | இலங்கை பெருந் தோட்டத் துறை யின் தேசிய முக்கியத்துவம் | 1.1 | தேசிய பொருளாதாரத்தினுள் பெருந்தோட்டத் துறையின் பங்குபற்றல் |
| | | 1.2 | பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்பு |
| | | 1.3 | பெருந்தோட்டக் கைத்தொழில் னால் காட்டுகளுக்கு ஏற்படும் பாதிப்பு |
| | | 1.4 | பெருந்தோட்டப் பிரிவின் உற்பத் தித்திறனை மேம்படுத்தல் |
| | | 1.5 | தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை சிறு தோட்ட உரிமை யாளர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் |
| | | 1.6 | பெருந்தோட்டப் பயிர்கள் மற்றும் சார்ந்த உற்பத்திகளின் கூடிய விலை பெறுவதற்காக பெறுமதி சேர்க்கும் செயல்முறை (Value addition) |
| | | 1.7 | பெருந்தோட்டப் பயிர்கள் வகைப் படுத்தல் (Diversification of Plantation Crops) |
| | | 1.8 | பெரியளவிலான தோட்டங்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்து வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய விவசாய மற்றும் முகாமைத்துவ மாற்றங்கள் |
| | | 1.9 | தேசிய ரீதியாக மண் பாதுகாப்புச் செய்வதில் தோட்டங்களின் முகா மைத்துவத்தில் இருக்கின்ற முக்கியத்துவம் |
| | | 1.10 | சுற்றாடலுக்கு பொருத்தமான வணிக செயல்முறைகள் அமுல் படுத்துவத்தின் இருக்கின்ற தேசிய முக்கியத்துவம் |
| | | 1.11 | பெருந்தோட்டக் காணிகளை ஏனைய செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவத்தில் தேசிய பொருளாதாரத்திற்கு ஏற்படும் பாதிப்பு |
| 2 | தோட்டக் கம்பனிகள் முகாமைத்துவம் | 2.1 | காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவின் சட்ட ரீதியான பின்னணி |
| | | 2.2 | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் பொறுப்பு |
| | | 2.3 | காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவிற்கு ஒப்படைத்த காணிகள் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு ஒப்படைத்தல் |
| | | 2.4 | காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவிற்கு ஒப்படைத்த காணி களின் பிரச்சினைகள் |
| | | 2.5 | பெருந்தோட்டக் கம்பனிகள் உருவாக்குவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் |

| | | | |
|---|---|---|---|
| | | 2.6 | பொன்னான பங்குகள் மற்றும் அதன் அதிகாரங்கள் |
| | | 2.7 | பெருந்தோட்டக் கம்பனிகளுடன் மேற்கொள்ளப்பட்ட குத்தகை உடன்படிக்கைகள் |
| | | 2.8 | பெருந்தோட்டக் கம்பனிகளின் பரிபாலன நெருக்கடிகள் |
| | | 2.9 | தோட்டத் தொழிலாளர்களுக்கு குடியிருப்புகள் நிர்மாணம் செய் வதற்காக காணிகள் வழங்குதல் |
| | | 2.10 | தோட்டக் காணிகளின் அளவை செயற்பாடுகள் |
| | | 2.11 | தோட்டக் காணிகள் மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்களில் அனுமதியற்ற குடியிருப்பா ளர்கள் அகற்றுதல் மற்றும் பொது செயற்பாடுகளுக்காக காணிகள் விடுவித்தல் |
| | | 2.12 | பெரியளவிலான பெருந்தோட்டக் காணிகள் உப குத்தகைக்கு கொடுத்தல் |
| | | 2.13 | பெருந்தோட்டக் கம்பனிகள் மேற்பார்வை செய்வதில் கவனம் செலுத்த வேண்டிய பிரதான காரணிகள் |

9.2 ***நேர்முகப் பரீட்சை :***

9.2.1 சாதாரண நேர்முகப் பரீட்சை : (புள்ளிகள் எவையும் கொடுக்கப்பட மாட்டாது)

9.2.2 நிறைவேற்ற எதிர்பார்க்கும் நோக்கங்கள்.- சேவை பிரமாணக் குறிப்புக்கு ஏற்ப பிரசுரிக்கப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் பூர்த்திச் செய்துள்ளது என பரிசோதனை செய்தல்

10. **பரீட்சை நிபந்தனைகள்** :

(1) பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்தி ஒவ்வொருவரும் ஒரு மொழியை தெரிவுசெய்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் அனைத்து வினாப்பத்திரங்களுக்கு ஒரு மொழியிலேயே விடைகள் தருதல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்கு தனது விண்ணப்பத்தின் காட்டப்படும் பரீட்சை மொழிமூலம் மாற்றுவதற்காக அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(2) பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபாவாகும். பரீட்சைக் கட்டணம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி அல்லது அதற்று முன்னர் பரீட்சைகள்ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 என்னும் அரசிறைத் தலைப்பின் கீழ் அரசாங்க அரசிறைக்கு வரவு வைக்கப்படுவதற்குக் காசாக ஏதேனும் அஞ்சலகத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், பரீட்சார்த்தியின் பெயரில் பெறப்பட்ட பற்றுச்சீட்டானது, அது கழராதவாறு விண்ணப்பத்தில் குறிப்பிட்ட இடத்தில் அதன் விழிம்புகளுள் ஒன்று ஒட்டப்படுதலும் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதிஒன்றைப் பரீட்சார்த்தி தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

(3) பரீட்சைக் கட்டணமாகப் பணக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பரீட்சைக் கட்டணம் எச்சூழ்நிலைகளின் கீழும் மீளளிக்கப்பட மாட்டாது அல்லது வேறு பரீட்சைக்காக கைமாற்றப்பட மாட்டாது.

(4) பரீட்சையானது கொழும்பில் 2016, யூலை மாதம் நடைபெறும். பரீட்சை பற்றிய திகதி பின்னர் அறிவிக்கப் படும்.

(5) முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளுடையவர்கள் மட்டும் விண்ணப்பிக்கப் பட்டுள்ளதென பூர்வத் தீர்மானத்தின் கீழ் விண்ணப்பங்கள் முன்வைத்துள்ள அனைத்து விண்ணப்பதாரர்களிடம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைப் பிரவேச அட்டைகள் வெளியிடப்படும்.

பிரவேச அட்டையின்றி பரீட்சார்த்தி எவரும் பரீட்சை மண்டபத்தினுள் உட்பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சார்த்தியின் கையொப்பம் அத்தாட்சிப் படுத்தப்பட்டுள்ள பிரவேச அட்டை மட்டுமே பரீட்சை தொடங்கும் நாளன்று பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வை யாளருக்குக் காண்பிக்கப்படுதல் வேண்டும்.

எவரேனும் பரீட்சார்த்திருக்குப் பிரவேச அட்டையொன்றை வழங்குதலானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்குத் தேவைப்பட்ட தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்னும் நிகழ்வை ஏற்றுக்கொள்வதாகக் கருதப்படுத லாகாது.

(6) விண்ணப்பமானது, 22 செ.மீ. x 29 செ.மீ. என்னும் அளவிலான ஏ 4 தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படுதல் வேண்டும். 1 முதல் 7 வரையிலான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும், ஏனையவை அடுத்த பக்கத்திலும் காட்டப்பட்டவாறு விண்ணப்பம் தயாரித்தல் வேண்டும். இயைபான விபரங்கள் பரீட்சார்த்தியின் கையொப்பத்திலேயே தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் ஒத்திராத விண்ணப்பங்களும் முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் நிரப்பப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றை வைத்திருத்தல் பயனுள்ளதாகும். மேலும், நிரப்பப்பட்ட விண்ணப்பம் இப்பரீட்சை அறிவித்தலில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்திருக்கின்றதாவெனப் பரீட்சார்த்தி செவ்வை பார்த்தல் வேண்டும் என அறிவிக்கப்படுகின்றது. மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்திராத ஏதேனும் விண்ணப்பம் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும் என மேலும் அறிவிக்கின்றது.

(7) பரீட்சார்த்திகளுக்குப் பிரவேச அட்டைகள் அனுப்பப் பட்டவுடன் பரீட்சைகள் திணைக்களம் அப்பயன்பட்ட

அறிவித்தலொன்றைச் செய்தித்தாள்களில் வெளியிடும். அறிவித்தல் வெளியிட்டு 2 அல்லது 3 நாட்களுக்கு பின்னரும் பிரவேச அட்டையைப் பெற்றிராத பரீட்சார்த்திகள் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அது தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவிக்க வேண்டும். தங்களிடம் வைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியையும், விண்ணப்பத்தை பதிவுச் செய்த பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியையும், பரீட்சைக் கட்டணத்தின் கொடுப்பனவின் மீது வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியையும், கொழும்பின் எல்லைகளுக்கு வெளியே வதிபவராயின், அனுமதி அட்டை அனுப்புவதற்காக தொலைநகல் இலக்கமும், உட்படுத்துக் கொண்டு கடிதமொன்று இலங்கை பரீட்சை திணைக்களத்திடம் தொலைநகல் ஊடாக முன்வைத்தல் மிக பொருத்தமானது.

(8) அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் மீது பரீட்சையைப் பிற்போடுவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கொண்டுள்ளார்.

(9) பரீட்சையை நடாத்துவதற்காகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட விதிகளுக்குப் பரீட்சார்த்திகள் அமைந்தோராகவுள்ளனர். அத்தகைய விதிகள் மீறப்படின் அவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டனைக்கு உட்பட்டவராகவிருப்பார்.

(10) *பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.*- ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அவரது ஆளடையாளத்தைப் பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் எண்பித்தல் வேண்டும். பின்வரும் ஆவணங்களுள் ஒன்று மட்டுமே இந்நோக்கத்துக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

* ஆட்களைப் பதிவுசெய்தல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
* செல்லுபடியான கடவுச்சீட்டு.

**குறிப்பு** :

(அ) எந்த ஆவணமோ அல்லது அதன் பிரதியோ விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதலாகாது.

(ஆ) கோரப்படும்போது ஆவணங்கள் காண்பிக்கத் தவறுகின்ற பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(இ) அனைத்து விண்ணப்பதாரர்கள் தமது திணைக்கள தலைவர்களினூடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பிரவேசஅட்டையிலுள்ள அவரது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துவிப்பது வலுக்கட்டாயமானது.

(11) *பரீட்சைப் பெறுபேறுகள்.*- எழுத்துப் பரீட்சையின் உயர்ந்த திறனை காட்டிய விண்ணப்பதாரர்களின் பெறுபேறுகள் பட்டியல் செயலாளர், அரச சேவை ஆணைக்குழுவிடம் வழங்கப்படும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், அஞ்சலின் மூலம் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தின் மூலம் பரீட்சார்த்திகளுக்குப் பெறுபேறுகளை நேரடியாக வழங்குவார்.

11. **பொய்யான தகவலை வழங்குதல்**.- உங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள யாதாயினும் தகவலொன்று பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்பதற்கு முன்பாக கண்டறியப்படுமாயின் உங்களது விண்ணப்பிக்கும் தகைமை இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவலொன்று ஆட்சேர்ப்பதன் பின்னர் கண்டறியப்படுமாயின் அதற்கான நடவடிக்கைகளுக்கு உட்படும் வகையில் சேவையில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12. இவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்படாத ஏதேனும் விடயம் பற்றி அரச சேவை ஆணைக்குழு முடிவு செய்யப்படும். மேலும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான அல்லது நிரப்பாது விடுவதற்கான அல்லது வெற்றிடங்களின் பகுதியை நிரப்புவதற்கான இறுதி முடிவு அரச சேவை ஆணைக்குழு சார்ந்ததாதல் வேண்டும்.

13. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது இசைவின்மை ஏற்படும பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்..

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

உபாலி மாரசிங்க,
செயலாளர்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு,
2016, ஏப்பிறல் 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

**பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் நிறைவேற்றுத் தர சேவை வகுதியைச் சேர்ந்த உதவிப் பணிப்பாளர் (திணைக்களத்திடப்பட்ட) பதவிக்கான ஆட்சேர்பும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2016**

**Limited Competitive Examination for recruitment to the post of Assistant Director (Departmental) of Executive Grade of the Ministry of Plantation Industries -2016**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4 ☐
(உரிய இலக்கத்தை கட்டத்தில் எழுதுக)

1. பெயர் :

1.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----. (உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 கடைசியாக வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர் களின் முதல் எழுத்துக்களைப் பின்னருமாக பெயரை (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா : GUNAWARDHANA H.M.S.K.)

1.3 முழுப் பெயர் (தமிழில் அல்லது சிங்களத்தில்) :----.

2. அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :

2.1 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

2.2 நிரந்தர முகவரி (தமிழில் அல்லது சிங்களத்தில்) : ----.

3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4. பால் :
(ஆண்-0, பெண்-1) ☐
(உரிய இலக்கத்தை கட்டத்தில் எழுதுக)

5. சிவில் அந்தஸ்த்து :
திருமணமானவர் - 1, திருமணமாகாதவர் - 2
(உரிய இலக்கத்தை கட்டத்தில் எழுதுக)

6. 6.1 பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

6.2 2016.05.13 ஆந் திகதிக்கு வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

7. தற்போதைய பதவி :

7.1 பதவியைச் சேர்ந்த சேவை :----.
(உதா: சார்ந்த சேவை வகுதி, அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை)

7.2 முதல் நியமனம் திகதி :----.

7.3 பதவியின் முழு சேவைக்காலம் :----.

8. முந்தைய 05 வருட காலத்தில் சம்பள உயர்வுகள் சம்பாதித் துள்ளீர்களா? :----.

9. தற்போதைய கடமை நிலையம் :----.

10. பெற்றுள்ள பட்டத்தின் விஷயம் :----.

10.1 பெற்றுள்ள வகுப்பு நிலை :

10.2 பட்டம் பெற்ற வருடம் :

10.3 பட்டம் பெற்ற பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் : ----.

11. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பில் விபரங்கள் :

11.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபாலகம் :----.

11.2 பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி :----.

11.3 செலுத்தப்பட்ட பணம் :----.

| பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும் |
|---|

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதென்றும் சரியானவையென்றும் உறுதிப்படுத்துகிறேன். இங்கே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவை அல்லது பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால், நியமனம் கிடைப்பதற்கு முன்னராயின் தகைமை இழந்தவனாவேன் எனவும் நியமனம் கிடைத்த பின்னராயின் நட்டஈடின்றி சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு உள்ளாவேன் எனவும் நான் அறிவேன். மேலும் பரீட்சை நடத்துவது மற்றும் பெறுபேறுகள் வெளியிடுவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு நான் உட்படுவேன் எனவும், ........................ ஆந் திகதி திணைக்களத் தலைவரின் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டதென்றும் தெரிவிக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

குறிப்பிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கப் பட்டுள்ளஆண்/பெண் உத்தியோகத்தரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதென்றும் சரியானவையென்றும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதென்றும், அப்பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளதென்றும், விண்ணப்பதாரர் எனது முன்னிலையில் கையொப்பமிடப்பட்டுள்ளதென்றும், அவரின் கையொப்பத்தை சரியானதென்றும் கூறுகின்றேன்.

அவர் இப்பரீட்சைக்காக தகைமை பெற்றுக்கொள்ளப்பட்டதால்/ பெற்றுக்கொள்ளப்படாததால் விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்வேன்/செய்யமாட்டேன். அவர் மேற்படி பதவிக்குத் தெரிவு செய்யப்படின், அவரை இவ் அமைச்சின்/இத்திணைக்களத்தின் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது.

----,
திணைக்கள தலைவரின் கையொப்பம்
மற்றும் பதவி இலச்சினை.

திகதி :----.

4-727